
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1094

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## இது பெரியார் மண்

ர.பிரகாசு

45

பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.

# கலையின் வழியாகக் கலகம்!

1948-ஆம் ஆண்டு, ஓமந்தூர் ராமசாமி தலைமையிலான அரசு, சென்னை மாகாணப் பள்ளிகளில் இந்தியை மீண்டும் கட்டாயப் பாடமாக்கியது. நீறுபூத்த நெருப்பாக இருந்த முதல் இந்தி எதிர்ப்புப் போரின் உணர்ச்சிப் பிழம்புகள் மீண்டும் வெடிக்கத் தொடங்கின. அந்த உணர்வுகளுக்குத் தப்பாத ஒரு கிராமம் கும்மம்பட்டி. திண்டுக்கல்லில் இருந்து 11 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சிற்றூர். அந்த ஊரைச் சேர்ந்த கு.சி.பழனிச்சாமி, எந்நேரமும் கையில் பெரியார், அண்ணா நூல்களை வைத்திருப்பவர். பத்தாம் வகுப்பு மாணவரான அவர், சக மாணவர்களோடு உரையாடும்போதுகூட தமிழ், தமிழ்நாடு, இந்தி எதிர்ப்பு பற்றியதாகவே இருக்கும். ‘திராவிடப் பண்ணை’ நூல்களை வாங்கி, தான் படிப்பதோடு மட்டுமல்லாமல், சக மாணவர்களுக்கும் கொடுத்து படிக்கச்சொல்லி, அதில் இருந்த கருத்துகளை விவாதிப்பார்.

இதை முறைப்படுத்துவதற்காகத் தன் நண்பர்களுடன் இணைந்து 1949-இல் ‘கலை மன்றம்’ ஒன்றைத் தொடங்கினார். “கலை என்பது மக்களை மகிழ்விப்பதற்கு மட்டுமல்ல; அவர்களது மனங்களில் சிந்தனையைக் கிளற வேண்டும்” என்ற அண்ணாவின் கருத்துக்கு ஏற்ப செயல்பட்டது, இந்தக் கலை மன்றம். ராமாயணம், மகாபாரதக் கதைகள்தான் அதுவரை அங்கு மாணவர்களுக்குப் பாலபாடம். கோயில் திருவிழாக்களில் வட்டக்கும்மியும், ஒயிலாட்டமும் பிரபலம். இந்த நிலையில், 1949-ஆம் ஆண்டு திண்டுக்கலில் நடைபெற்ற ‘பேச்சுரிமை, எழுத்துரிமை’ மாநாட்டில் பேசிய அண்ணா, ‘கிராமப்புறக் கலைகளில் புதிய கருத்துகளை இணைத்து நம் கொள்கைகளைப் பரப்ப வேண்டும். பாடல்கள் எழுத வேண்டும். பாடலின் பொருள் மக்களுக்குப் புரியும்படி எழுத வேண்டும்’ என்று அறிவுறுத்தி விட்டுச்சென்றார்.



கு.சி.பழனிச்சாமி

ஏற்கெனவே, கலை மன்றத்தின் வாயிலாக நாடகம், சொற்பொழிவு, பொதுப்பணி பயிற்சிகளைத் தொடங்கியிருந்த கு.சி.பழனிச்சாமிக்கு, அண்ணாவின் அறிவுரை இன்னும் ஈர்ப்பைத் தந்தது. பகுத்தறிவுக் கருத்துகளை எடுத்துரைக்கும் வகையில் ஒயிலாட்டப் பாடல்கள் பலவற்றை அவரே எழுதினார். ஒயிலாட்டத்தின் மூலம் பகுத்தறிவு உணர்வையும் தமிழ்ப்பற்றையும் ஊட்டி வளர்த்தது கலை மன்றம். அதுபோக, அப்பகுதி மாணவர்கள் கம்பரின் ராமாயணத்தை அறியும் முன்னரே அவர்களிடத்தில் அண்ணாவின் ‘கம்பரசத்தை’ச் சேர்த்துவிட்டார். கீதையை அறியும் முன்னரே ‘ஆரிய மாயை’யை அறியச் செய்து விட்டார். சேரன்மாதேவி குருகுல சம்பவத்தைக் கொண்டுசேர்த்து விட்டார்.

இப்படி பகுத்தறிவால் வார்க்கப்பட்ட மாணவர்கள் உருவாக்கியது என்பதால், ‘கலை மன்றத்தினர் என்றாலே சாமி இல்லை என்று சொல்லும் கருப்புச் சட்டைக்காரர்கள்’ என்றே ஊரார் கருதினர். மக்கள் மனத்தை ஈர்ப்பதற்காகப் பொதுப்பணிகளிலும் ஈடுபடுத்திக்கொண்டது கலை மன்றம். ஆறு மாதங்களுக்கு



செழிப்பான நீரோட்டம், ஆறு மாதங்களுக்கு கடும் வறட்சி என்பதுதான் கும்மம்பட்டியின் நிலைமை. வறட்சிக் காலங்களிலும் ஊர் மக்களுக்குக் குடிநீரை உறுதிசெய்ய வேண்டுமென்பதற்காக, வறண்டு கிடந்த பாண்டியர் காலத்து பொதுக்கிணற்றைத் தூர் வாரியது கலை மன்றம். ஊராரின் பாராட்டைப் பெற்று, மக்களிடையே மன்றத்திற்கு ஒரு நெருக்கம் ஏற்பட்டது. அதன்பிறகு, ஊரில் தீப்பிடித்தால் அணைப்பதாக இருந்தாலும் சரி, திருடர்களை விரட்டிப் பிடிப்பது என்றாலும் சரி, கலை மன்றத்தினரே முன் நின்றார்கள்.

அதனால் மக்களும் மன்றமும் ஒன்றாகிப் போனதுடன், மன்றத்தினர் முன்வைத்த பகுத்தறிவுக் கருத்துகளுடனும் மனத்தளவில் ஒன்றிணையத் தொடங்கினர் கும்மம்பட்டி மக்கள்.

...பயணிப்போம்.

## ஒற்றுமைப் பண்பாடே தமிழ்நாடு!



தமிழ்நாடு என்றைக்கும் ‘டெல்லிக்கு அவுட் ஆஃப் கன்ட்ரோல்தான்’ எனக் கழகத் தலைவர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறி வருவது அரசியலுக்கு மட்டுமல்ல; பண்பாட்டுரீதியாக ஆரிய நச்சுக் கருத்துக்கு எதிராகவே தமிழ்நாடு இயங்கும் என்பதற்கும் பல சான்றுகள் உள்ளன. சமீபத்தில், தஞ்சாவூரில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியின் மூலம் அது மீண்டும் நிரூபணமாகிறது.

தஞ்சாவூர் நாவலர் நகரில் மளிகைக் கடை நடத்திவருகிறார் ஜாகிர் உசேன். பொறியியல் பட்டதாரியான இவரின் மகன் பரீஸ்கான், சிறுநீரக பாதிப்பு ஏற்பட்டு, தீவிர சிகிச்சைபெற்று வந்துள்ளார். அப்பகுதி மக்கள், ஜாகிர் உசேனுக்கு ஆறுதல் கூறியதுடன், அங்குள்ள வீரமாகாளியம்மன் கோயிலில் பிரார்த்தனை செய்துகொள்ளுமாறு, அவர்களின் நம்பிக்கையை வெளிப்படுத்தியுள்ளனர். அப்பகுதி மக்களின் நம்பிக்கையை மதித்த, ஜாகிர் உசேன் குடும்பத்தினர், வீரமாகாளியம்மன் கோயிலுக்குச் சென்று வேண்டிக்கொண்டுள்ளனர்.

மருத்துவ சிகிச்சையில் இருந்த பரீஸ்கான் நலம்பெற்று வந்ததும், ஜாகிர் உசேன் குடும்பத்தினர், அப்பகுதி மக்களின் நம்பிக்கையின்படி வீரமாகாளியம்மன் கோயிலில் பொங்கல் வைத்து, அப்பகுதி மக்களுக்குக் கோயிலிலேயே கறி விருந்து பரிமாறி, நேர்த்திக்கடனை நிறைவேற்றி இருக்கின்றனர். தங்களது மகன் குணம் அடைந்தமைக்கு, மக்களின் வேண்டுதல்தான் காரணம் எனக் கூறி நன்றியைத் தெரிவித்துக்கொண்டுள்ளனர், ஜாகிர் உசேன் குடும்பத்தினர்.

மத நம்பிக்கைகளால் வேறுபாடுகள் இருந்தாலும், மனிதநேயம், ஒற்றுமை, ஆதரவு, நம்பிக்கைகளை மதிப்பது என்பதில் தமிழ்நாடு என்றைக்கும் முன்னோக்கி சிந்திக்கும் மாநிலம் என்பதை தஞ்சாவூர் நிகழ்வு காட்டியுள்ளது. இந்த ஒற்றுமையைச் சிதைக்கும் அரசியல் எதுவாக இருந்தாலும், அதற்கு தமிழ்நாடு ‘அவுட் ஆஃப் கன்ட்ரோல்’தான்.

## ஃப்ளாஷ்பேக்



### தலைவரிடம் தேர்தல் நிதி!



சி.கோபி

2011-ஆம் ஆண்டு ஒன்றுபட்ட வேலூர் மாவட்டத்தின் சார்பில், ஆம்பூர் நகரில் நடந்த கழகப் பொதுக்கூட்டத்தில், அன்றையப் பொருளாளர், இன்றைய கழகத் தலைவர், திராவிட நல்லாட்சி நாயகர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்துகொண்டார். அப்போது, கழகத் தேர்தல் நிதியாக ரூ.15 ஆயிரத்துக்கான காசோலையைத் தலைவர் அவர்களிடம் வழங்கினேன். மேடையில், இன்றைய கழகப் பொதுச் செயலாளர் மாண்புமிகு அமைச்சர் அண்ணன் துரைமுருகன், அன்றைய ஒன்றுபட்ட வேலூர் மாவட்டக் கழகச் செயலாளர், இன்றைய ராணிப்பேட்டை மாவட்டக் கழகச் செயலாளர் மாண்புமிகு அமைச்சர் அண்ணன் ஆர்.காந்தி, இன்றைய திருப்பத்தூர் நகர கழகச் செயலாளர் வழக்கறிஞர் இரா.இராஜேந்திரன் ஆகியோரும் உடனிருந்தனர்.

**– சி.கோபி, மாநில துணைச் செயலாளர், கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை, கே.வி.குப்பம், வேலூர் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

95

"கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்..."

# மக்களின் நிம்மதியே திராவிட மாடலின் நோக்கம்!



***மழைநீர் கால்வாய்களின் முகப்பில் கொசு வலை அமைக்கும் சென்னை மாநகராட்சியின் முயற்சியைக் கிண்டல் செய்வதும் மீம்ஸ் போடுவதுமாக இருக்கிறார்களே தி.மு.க. விமர்சகர்கள்?***

கொசுத் தொல்லையைவிட இவர்கள் தொல்லை கொடூரமானது. கொசுவலை அமைப்பதை மட்டுமே மாநகராட்சி மேற்கொள்ளவில்லை. ட்ரோன் மூலம் மருந்து தெளித்தல், புகைமூட்டம் போடுதல், வீடு வீடாகச் சென்று ஆய்வு என ஏறத்தாழ 1000 பேர் இப்பணிகளைச் செய்துவருகிறார்கள். சென்னையைப் பொறுத்தவரை நகரத்தின் உள்ளே தண்ணீர் தேங்கி நிற்காத பகுதிகளில் கூட கொசுத்தொல்லை அதிகமாக இருக்கக் காரணம், மழைநீர் கால்வாய்களில் சாக்கடை கலந்த நீரும் கலப்பதால்தான்.

மழை நீருக்கும் கழிவு நீருக்கும் தனித்தனி குழாய்கள் அமைக்கப்பட்டுள்ள நிலையில், சில இடங்களில் மழைநீருடன் கழிவு நீரைக் கலந்து விடுகிறார்கள். இது கொசு உற்பத்திக்குக் காரணமாகிவிடுகிறது.

மழைநீர் கால்வாய்களுக்குள்ளே உற்பத்தியாகும் கொசுக்களைத் தடுக்க வேண்டும் என்பதுதான் தற்போதைய நோக்கம். மேற்பகுதி முழுவதும் மூடப்பட்டுள்ள இந்தக் கால்வாயின் உள்ளே கொசுக்கள் எவ்வாறு பயணம் செய்து முட்டை இடுகிறது என்று பார்த்தால், அதற்குக் காரணம் சாலைகளில் இருந்து மழைநீர் கால்வாய் உள்ளே செல்ல அமைக்கப்பட்டுள்ள இந்த CATCH PIT தான். இதன் வழியாகத்தான் கொசுக்கள் உள்ளே சென்று முட்டை இடுகின்றன. அங்கிருந்து வெளியேயும் வருகின்றன. தெருவில் கொசு மருந்து அடிக்கும் மாநகராட்சி ஊழியர், இந்தக் கால்வாயிலும் மருந்து அடிக்கும்போது, சில நாட்களுக்குள் கொசுத்தொல்லை கட்டுப்படும்.

CATCH PIT வழியாகக் கொசுக்கள் கால்வாய் உள்ளே செல்வதைத் தடுத்துவிட்டால், பெருமளவில் கொசுக்களின் இனப்பெருக்கத்தைத் தடுத்துவிடலாம் என்பதால், சென்னை மாநகராட்சி இந்த முயற்சியை மேற்கொண்டுள்ளது. பெருமழை காலத்தில் இதைச் செய்வது சாத்தியமில்லை என்பதால், மழை குறைந்துள்ள நிலையில், இந்த முயற்சியை மேற்கொண்டு, சாக்கடை நீர் கலக்கும் இடங்களில் கொசு உற்பத்தியைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. கொசுக்களால் மனிதர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளைக் கட்டுப்படுத்துவதில் இதுவும் ஒரு நடைமுறை. இவை மட்டுமல்லாமல், ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டுவரும் பல்வேறு நடவடிக்கைகளும் புதிய தொழில்நுட்பங்களும் சென்னை மாநகரத்தில் கொசுக்கள் உற்பத்தியைக் கட்டுப்படுத்தும். கொசு குறைந்தால் நோய்களும் குறையும். மக்களுக்கு நிம்மதியான தூக்கமும் கிடைக்கும்.

இது புரிந்தும் புரியாமல், சாக்கடை நீர் கலப்பதால் உருவாகும் கொசுக்களைக் கட்டுப்படுத்த வலை அமைப்பதைக் கிண்டலடிப்பவர்கள் யார் தெரியுமா? வைகை நீர் ஆவியாகாமல் இருக்க தெர்மாகோல் பயன்படுத்திய ‘விஞ்ஞானி’களின் கூட்டாளிகள்தான்.

...வினா தொடரும்.

## மலரும் நினைவுகள்

### வரலாற்றின் புதிய கட்டம்!

1967-ஆம் ஆண்டு, டிசம்பர் 29 முதல் ஜனவரி 1-ஆம் தேதி வரை சென்னையில் நான்கு நாட்கள் நடைபெற்ற கழகத்தின் 4-வது பொது மாநாடு, மக்களிடம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அண்ணாவின் ஆட்சி அமைவது உறுதி! அதைத் தடுக்க எவராலும் முடியாது எனும் நம்பிக்கையில் கழகத் தோழர்களைத் தேர்தல் பணியில் ஈடுபட வைத்தது.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.